## IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

## OS. No. 26/2011

| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|---|---|
| NAME | கிரிஜா | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.01.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.273/2010 தாக்கல் செய்தது பற்றி தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் என்ன தீர்ப்பானது என்றால் இடம் கிரிஜா மற்றும் மோகனுக்கு சொந்தமானது என்றும் அந்த இடத்தில் யாரும் இடைஞ்சல் செய்யக்கூடாது என வந்தது. மேற்படி தீர்ப்பு மற்றும் நான் தாக்கல் செய்த ஆவணங்களை படித்து பார்த்து தான் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம்.

2. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் 273/2010 வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வீட்டு மனை ரசீதுகள் எனது கணவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான், கொஞ்சநாள் அவர் பெயரில் இருந்தது, பட்டா என் பெயருக்கு வந்தபிறகு என் பெயரில் வந்தது. குடும்ப அட்டை 2005-ல் இருந்து 2009 வரை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

3. பட்டா என் பெயரில் வாங்குவதற்கு முன்பு குடும்ப அட்டை வாங்கிவிட்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.6 அடையாள அட்டை பட்டா வாங்குவதற்கு முன்பு வாங்கியது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.சா.ஆ.7 இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட உத்தரவில் யார் கையெழுத்திட்டது என்றால் எனது வீட்டுக்காரர் பெயரில் இருந்தது அவர் தான் கையெழுத்திட்டார்.

4. பட்டா என் பெயரில் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பட்டா என் பெயரில் உள்ள நிலையில் குடியிருப்பு கட்ட என் கணவர் பெயருக்கு உத்தரவு கொடுத்தது தவறு என்றால் இருக்கலாம். வீடு கட்டியதற்கு புகைப்படம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. ஆன்லைன் பட்டா எப்போது வாங்கினேன் என்றால் 2023–ல் வாங்கினேன். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோதும் மேல்முறையீடு AS.08/2015–ல் நிலுவையில் இருந்தபோதும் பட்டா வாங்கியது தவறு என்றால் சரியல்ல, பட்டா வாங்கிகொள்ளுங்கள் என சொன்னார்கள். பி.சா.ஆ.3 பட்டா எனக்கு மட்டும் கொடுத்தார்களா அல்லது அங்கு குடியிருக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்தார்களா என்றால் எனக்கு மட்டும் கொடுத்தார்கள்.

6. என் இடத்திற்கு சுற்றியுள்ள மற்றவர்களுக்கு வெல்பேரில் பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் எனக்கு மட்டும் கொடுக்கவில்லை, நான் மனு கொடுத்து விசாரித்து பட்டா கொடுத்தார்கள். 273/2010 வழக்கில் முனிசாமி தரப்பில் வெல்பேர் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் என் பக்கம் தீர்ப்பானது என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் சுவாதீனத்தில் இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யாததால் என் சார்பாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. ஆகவே நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.